வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

## 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 03ஆம் இலக்கப் பணிப்புரைகள்

### தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2017ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (வெளிநாட்டுச் செலாவணிக் கணக்குகளைத் திறத்தல் மற்றும் பேணுதல்) ஒழுங்குவிதிகள் (ஒழுங்குவிதிகள்) மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9(1) மற்றும் 9(2)ஆம் பிரிவுகள் என்பனவற்றின் நியதிகளில் பின்வருவனவற்றிற்குட்பட்டு தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறந்து பேணி வருவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

**1.1 தகைமையுடைய ஆட்கள்**

தகைமையுடைய ஆட்கள் ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்ட ஆட்களாக இருத்தல் வேண்டும்.

**1.2 கணக்குகளைத் திறந்து பேணி வருதல்**

ஒழுங்குவிதிகளின் மூலம் இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் நியதிகளில், ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட விடயங்களுக்குப் புறம்பாக, தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறந்து பேணி வரும் பொழுது பின்வருவனவற்றைப் பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும்.

(அ) ஒன்றில் இலங்கைக்குத் தற்காலிகமாக விஜயம் செய்கின்ற இலங்கையரல்லாதவர்கள் அல்லது இலங்கைக்கு விஜயம் செய்ய எண்ணியுள்ளவர்கள் இக்கணக்குகளைக் கூட்டுக் கணக்குகளுக்காகத் திறக்கவும் பேணவும் தகைமையுடையவர்களாகார்.

(ஆ) பராயமடையாதவர் இலங்கை நாட்டவராக அல்லது இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்டவராகவும் இலங்கைக்கு வெளியே வதிபவராகவும் இருந்து அவரின் பெயரில் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குத் திறக்கப்பட வேண்டிய சந்தர்ப்பத்தில், அத்தகைய கணக்குகளை, இலங்கைக்கு வெளியே வதியும் அவர்களது பெற்றோர் அல்லது பாதுகாவலரிடமிருந்து பெறப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிப் பணவனுப்பல்களை வரவு வைப்பதன் மூலம் அல்லது ஏற்கனவேயுள்ள பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலிருந்து நிதியத்தினை மாற்றல் செய்வதன் மூலம் திறத்தல் வேண்டும்.

(இ) பின்வரும் தகவல்களையும் ஆவணங்களையும் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறப்பதற்கு முன்னர் ஏற்புடைத்தான விதத்தில் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

| | தகைமையுடைய ஆட்கள் | தகவல்/ ஆவணங்கள் |
|---|---|---|
| i. | இலங்கைக்கு வெளியே வதியும் பராயமடையாதோர் உட்பட இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட தனிப்பட்ட ஒருவர் | • முழுப் பெயர், தேசியம் மற்றும் வெளிநாட்டு முகவரி<br>• கடவுச்சீட்டு இலக்கம், வழங்கப்பட்ட திகதி செல்லுபடியாகும் காலம்<br>• இலங்கையிலிருந்து புறப்பட்டுச் சென்ற திகதி<br>• பிரசா உரிமை அல்லது வெளிநாட்டு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட விசாவின் தன்மை |

| | | |
|---|---|---|
| ii. | இலங்கையில் வதியும் இலங்கையரல்லாதவர் | • முழுப் பெயர், தேசியம் மற்றும் வெளிநாட்டு முகவரி<br>• இலங்கையில் தொழில்புரியும் இடத்தின் முகவரி மற்றும் பதவி ஏதுமிருப்பின்<br>• தொழில் ஒப்பந்தத்தின் பிரதி மற்றும் சம்பள விபரங்கள்<br>• குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட கடவுச்சீட்டு மற்றும் விசாவின் பிரதிகள் |
| iii. | ஒன்றில் இலங்கைக்குத் தற்காலிகமாக வருகைதரும் இலங்கையரால்லாதவர் அல்லது இலங்கைக்கு விஜயம் செய்ய எண்ணியுள்ள ஒருவர் | • முழுப் பெயர், தேசியம் மற்றும் வெளிநாட்டு முகவரி<br>• கடவுச்சீட்டு மற்றும் விசாவின் பிரதிகள் |

### 1.3 அனுமதிக்கப்பட்ட வரவுகள்

அனுமதிக்கப்பட்ட வரவுகள் ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்குட்பட்டனவாக இருத்தல் வேண்டும்.

### 1.4 அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்

ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட பற்றுக்களுக்குப் புறம்பாக ஒழுங்குவிதிகளினால் இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளில், தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்குப் பின்வரும் பற்றுக்கள் அனுமதிக்கப்படுகின்றன.

(அ) கணக்குடமையாளரின் வெளிநாட்டு நாணயக் கடன் கணக்கிற்கு அல்லது இலங்கை ரூபாக் கடன் கணக்கிற்கான நிதிய மாற்றல்கள்.

### 2. மாதாந்த கூற்றுக்கள்

(அ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இணைப்பு I இல் உள்ளவாறு மாதாந்த அடிப்படையில் dfem@cbsl.lk இற்கு மின்னஞ்சல் மூலம் அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ இத்திணைக்களத்திற்கு அறிக்கையினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) மேற்குறிப்பிட்ட அறிக்கையிடல் தேவைப்பாட்டிற்கிணங்க, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், அவர்கள் தொடர்பான வங்கிகளின் கணக்கேடுகளிலிருந்து தொடர்பான தகவல்களை உருவாக்கும் அல்லது பிரித்தெடுக்கும் விதத்தில் வங்கிக்குள் முறைமையொன்றினை நடைமுறைக்கிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளின் மாதாந்தக் கூற்று** **2017ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பணிப்புரைகளுக்கான இணைப்பு I**

வங்கியின் பெயர்: ........................................................................

அறிக்கையிடும் மாதம் மற்றும் ஆண்டு: ................................

| நாணய வகை | கணக்கு உடமை யாளரின் வதிவிட அந்தஸ் தின் வகை | ஆரம்ப நிலுவை | | வரவுகள் | | | | | பற்றுக்கள் | | | | இறுதி நிலுவை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | கணக்கு களின் எண்ணிக்கை | தொகை | வெளிநாடு களிலிருந் தான உள்முகப் பணவனுப் பல்கள் | ஏனைய கணக்கு களிலிருந் தான மாற்றல்கள் | வரவு வைக்கப் பட்ட மொத்த வட்டி | ஏனைய வரவுகள் | மொத்தம் | இலங்கை க்கு வெளியே செய்யப் பட்ட வெளிமுகப் பணவனுப் பல்கள் | ஏனைய கணக்கு களுக்கான மாற்றல்கள் | ஏனைய பற்றுக்கள் | மொத்தம் | கணக்கு களின் எண்ணி க்கை | தொகை |
| ஐ.அ. டொலர் | வதிவோர் | | | | | | | | | | | | | |
| | வதிவற்றோர் | | | | | | | | | | | | | |
| | மொத்தம் | | | | | | | | | | | | | |
| பிரித்தானிய பவுண் | வதிவோர் | | | | | | | | | | | | | |
| | வதிவற்றோர் | | | | | | | | | | | | | |
| | மொத்தம் | | | | | | | | | | | | | |
| யூரோ | வதிவோர் | | | | | | | | | | | | | |
| | வதிவற்றோர் | | | | | | | | | | | | | |
| | மொத்தம் | | | | | | | | | | | | | |
| ஏனையவை* குறித்துரைக் கப்பட்ட வெளிநாட்டு நாணயம் | வதிவோர் | | | | | | | | | | | | | |
| | வதிவற்றோர் | | | | | | | | | | | | | |
| | மொத்தம் | | | | | | | | | | | | | |

* ஏனைய குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களுக்குத் தேவையான அளவிற்கு நிரல்களை நீங்கள் விரிவாக்கிக் கொள்ளலாம்.

**அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அறிக்கையின் ஸ்கான் செய்யப்பட்ட பிரதியையும் மேலேயுள்ளவாறு எம்எஸ் எக்ஸ்செல் பதிப்பினையும் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

வங்கியின் கணக்கேட்டிலிருந்து பிரித்ததெடுக்கப்பட்ட / தயாரிக்கப்பட்ட மேற்கூறிப்பிட்ட தகவல்கள் துல்லியமானவை என்பதனை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம்.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர்: ...................................................

கையொப்பம்: ......................................................

திகதி: .......................................................

இணங்குவிப்பு அலுவலரின் பெயர்: ..................................................

கையொப்பம்: ......................................................

திகதி: .......................................................